# முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**MCOP No. 82/2024 c/w 83/2024**

**எ.ம.சா. 3**

நாள்: 24.02.2026 .

2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வித்யாதரன் | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் 4 ம் எதிர்மனுதாரர் தரப்பு நிறுவனத்தில் உதவி சட்ட மேலாளராக பணிபுரிகிறேன். 4 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 01.09.2023 | எ.ம.சா.ஆ.9 | TN 65 BZ 3188 என்ற டாடா ஏஸ் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்ட காப்பீட்டு பாலிசி | ஜெராக்ஸ் நகல் |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எந்த வாகனத்திற்கு காப்பீடு பாலிசி வழங்கினாலும், முறையான ஆவணங்கள் உள்ளதா என்று பார்த்தபின்புதான் பாலிசி வழங்குவோம் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்ட வாகனங்களுக்கு விபத்து ஏற்பட்டால், நாங்கள் இழப்பீடு வழங்குவோம் என்றால் விதிமீறல் இருந்தால் வழங்க மாட்டோம். இந்த வழக்கு விபத்தில் ஈடுபட்ட நான்கு சக்கர வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்துக்குண்டான வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால், எங்கள் நிறுவனம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

விபத்து ஏற்படுத்திய வாகனம் 3ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானதாலும், மேற்படி வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்துள்ளதாலும், மனுதாரர்களுக்கான இழப்பீடு தொகையை எங்கள் நிறுவனமும், 3ம் எதிர்மனுதாரரும் வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோன நபர்கள், கட்டணம் செலுத்தி பயணம் செய்ததாக எங்கள் நிறுவனம் தாக்கல் செய்த எதிருரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் அவ்வாறு நிரூபண வாக்குமூலத்தில் சொன்னதன் அடிப்படையில், நான் தற்போது அதை சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் எங்கள் நிறுவனத்தில் Package policy எடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர்தான் காரணம் என்பதால், 2ம் எதிர்மனுதாரர்தான் மனுதாரர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க தேவையில்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .